## 15. தலைப்பு 13 – இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

### 15.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

ஆணைக்குழுவினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| இழப்புத் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |

### 15.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதினொரு செலவின விடயங்களுக்கு ரூபா 12,162,034 கூட்டுத் தொகையான மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 10 சதவீதம் முதல் 58 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கில் பொறுப்புகள் தொடர்பான கூற்றில் ரூபா 192,770 தொகையான பொறுப்புகள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**15.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

---

அரசாங்கத்தின் நிதியிலிருந்து ஆணைக்குழுவின் 09 ஊழியர்களுக்கு ரூபா 1,656,650 கூட்டுத் தொகையான கடன் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான முற்பணக் கணக்கொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

**15.4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை செயற்படுத்துதல்**

---

மீளாய்வாண்டின்போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 4 தடவைகள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

**15.5 இணங்காமை**

---

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்த சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை | |
| XIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு | அரசாங்க உத்தியோகத்தருக்கு உணவு மற்றும் தங்குமிடங்களுக்காக நாளொன்றிற்கு வழங்கக்கூடிய ஆகக் கூடிய இணைந்த படி ரூபா 625 ஆக இருந்த போதிலும், ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கு அதற்கு முரணாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

---------------------------------------------------------

| | |
|---|---|
| நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | வழங்கப்பட்ட செயல்நிமித்த உப கட்டு நிதி உரிய செயற்பாடு முடிவடைந்ததும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவின் 13 உத்தியோகத்தர்களினால் 20 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 285,260 கூட்டுத் தொகையான உப கட்டு நிதி 08 நாட்கள் முதல் 44 நாட்கள் வரையிலான தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. |

(இ) அரசாங்க நிதிச்சுற்றறிக்கை

--------------------------------------------

| | |
|---|---|
| 2008 ஏப்ரல் 24 ஆந் திகதிய 431 ஆம் இலக்க சுற்றறிக்கை | வெளிநாடு சென்றுள்ள உத்தியோகத்தர்களின் விமானப் பயணச்சீட்டுக்கள் ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் கம்பனியிலிருந்து அல்லது மிஹின் லங்கா (தனியார்) கம்பனியிலிருந்து கொள்வனவு செய்யப்படாமல் மீளாய்வாண்டின்போது வேறொரு தனியார் நிறுவனத்திலிருந்து ரூபா 366,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |

## 15.6 வெளிநாட்டுதவி செயற்திட்டம்

-------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் மூன்று செயற்பாடுகளுக்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட ரூபா 7,189,178 நிதி ஏற்பாட்டை விஞ்சி ரூபா 8,323,760 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், அங்கீகாரமின்றி ரூபா 1,134,582 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலத்தில் இலங்கையின் மனித உரிமைகளுக்கான ஐக்கியநாடுகள் நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து ரூபா 20,774,778 செலவிடப்பட்டிருந்த போதிலும்

அந்தச் செலவினம் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்டத்தின் நிதியத்திலிருந்து பிரதேச அலுவலகம் மற்றும் நடமாடும் அலுவலகங்களுக்காக முன்னைய ஆண்டின்போது ரூபா 1,662,550 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட கணனி மற்றும் ஏனைய உபகரணங்களிலிருந்து ரூபா 373,069 பெறுமதியான கணனிகள் மற்றும் ஏனைய 95 உப பாகங்களை 2015 பெப்ரவரி 17 ஆந் திகதியளவிலும் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**15.7 வங்கிக் கணக்குச் செயற்பாடுகளில் உள்ள குறைபாடு**

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்வேறு செயற்திட்டங்களுக்காக திறக்கப்பட்ட பழைய 04 வங்கிக் கணக்குகளில் காணப்பட்ட ரூபா 698,355 கூட்டுத் தொகையான மீதி ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அதன் ஊழியர்களுக்கு கடன் வழங்கும் கணக்கிற்கு மாற்றுவதற்கான திறைசேரியின் அங்கீகாரம் 2015 பெப்ரவரி 15 ஆந் திகதியளவிலும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறப்பட்ட நான்கு வங்கிக் கணக்குகளையும் உள்ளடக்கி ஆணைக்குழுவின் அலுவலகத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட செயற்பாடற்ற 06 வங்கிக் கணக்குகளும் செயற்பாட்டிலுள்ள ஒரு வங்கிக் கணக்கும் காணப்பட்டதுடன் செயற்பாடற்ற கணக்குகள் தொடர்பான தகவல்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**15.8 முகாமைத்துவ நலிவுகள்**

--------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2014 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வுக்காகப் கீழே குறிப்பிடப்பட்டவாறு ரூபா 80,016 அசாதாரண செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

| அலுவலகம் | பொருள் விடயங்களின் எண்ணிக்கை | பொருள் அலகுகளின் அளவு | செலவிடப்பட்ட மனித நாட்களின் எண்ணிக்கை | செலவினம் |
|---|---|---|---|---|
| | | | | ரூபா |
| அம்பாறை பிரதேச அலுவலகம் | 37 | 159 | 20 | 49,693 |
| மாத்தறை பிரதேச அலுவலகம் | 43 | 134 | 10 | 13,675 |
| கண்டி பிரதேச அலுவலகம் | 36 | 154 | 07 | 16,648 |
| மொத்தம் | | | | 80,016 |

பிரதேச அலுவலகம் ஒன்றிற்கு அண்மையில் உள்ள பிரதேச அலுவலகத்திலிருந்து 2014 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மாற்றீட்டு முறையின் கீழ் செய்யப்பட்டிருக்குமாயின் ஆகக் குறைந்த கிரயத்துடன் மெய்மையாய்வு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பிருந்தது.

### 15.9 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | பதவி நிலை/ நிறைவேற்று | 135 | 62 | 73 |
| (ii) | உதவியாளர் | 72 | 55 | 17 |
| (iii) | சிற்றூழியர் | 66 | 53 | 13 |
| | மொத்தம் | 273 | 170 | 103 |